**கவனிக்க.-** *2024.06.07 ஆந் திகதிய 2388 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி V(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2389 - 2024 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2024.06.14**

*2389 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 598 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 598 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

597 - B82580 - 5,403(2024/06)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## திஹகொட பிரதேச சபை

களியாட்ட வரி அறவிடல்

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) பிரிவின் கீழ் செய்யப்பட்ட அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரி (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச சபையினால் 2023.11.07 ஆம் திகதிய தீர்மான இலக்கம் 2023/11/07/245 இன் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானத்தை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை விதி) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் வாசிக்கப்பட்டதும் 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாண கௌரவ ஆளுநர் விலியம் விஜேசிங்க கமகே ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

கலாநிதி விலியம் விஜேசிங்க கமகே,
தென் மாகாண ஆளுநர்,
தென் மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
காலி,
2024, ஏப்பிறல் 27.

**தீர்மானம்**

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) உப பிரின்படி கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் திஹகொட பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற மொத்த பிரவேச பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 10% வீதத்திற்கு சமமாக பணத்தை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்பட வேண்டும் எனும் கருத்தை விளம்பரப்பத்திரத்தில் விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து எதிர்வரும் மாத்தின் முதலாம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படுவதாக தீர்மானிக்கின்றேன். மேற்குறித்த களியாட்ட வரியை குறித்த களியாட்ட நடவடிக்கையை நடத்தும் திகதிக்கு முன் தினம் ஏற்பாட்டாளர்களினால் அல்லது ஏற்பாடு செய்பவர்களினால் திஹகொட பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டுமென திஹகொட பிரதேச சபை மேலும் தீர்மானித்துள்ளது.*

06 - 57

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழு

வடமேல் மாகாண மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண இறைவரித் திணைக்களத்தின் வரி அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண இறைவரி சேவையின் வரி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் காணப்படும் 04 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வடமேல் மாகாண இறைவரி திணைக்களத்தில் வெளிக்கள/ அலுவலக உத்தியோகத்தர்களின் சேவை யாப்பு மற்றும் பதவி உயர்வு முறையின் பிரகாரம் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கையைச் சேர்ந்த வடமேல் மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளர்களான ஆண்கள்/பெண்கள்

இடமிருந்து நிகழ்நிலையில் (online) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் குருநாகலில் நடத்தப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

**1. சம்பள அளவுத் திட்டம் :**

MN 5 - 2016 இன் படி இந்த பதவிக்கான சம்பள அளவுத் திட்டம்
ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 63,460 ஆகும்.

2. இந்த பதவிக்கு விண்ணப்பிக்க பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டத்திற்கு சம நிலையில் உள்ள வடமேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் கீழ்வரும் ஏதேனும் துறைசார் தகைமை ஒன்றைப் பெற்றிருத்தல்.

(அ) பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மத்திய பரீட்சை. (Institute of Chartered Accountants of Sri Lanka.)

(ஆ) மேம்பட்ட தொழில்நுட்ப கல்வி தேசிய நிறுவனத்தின் (SLIATE) கணக்கியல் மற்றும் வர்த்தகம் தொடர்பான Diploma பெற்றிருத்தல்.

(இ) ஆகு செலவு மற்றும் முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தில் (ICMA-UK) 1, 2, 3 பகுதிகளில் சித்தி பெற்றிருத்தல்.

(ஈ) பட்டயம் சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர் சங்கத்தின் (ACCA-UK) 1, 2, 3 பகுதிகளில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(iii) சட்டத்தரணியாக இருப்பது

அல்லது

(iv) அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் சேவையை உறுதிப்படுத்தியிருக்கும் மற்றும் 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருக்கும் அரசாங்க/மாகாண அரசாங்க முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவையின் உத்தியோகத்தர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். தற்போதுள்ள வெற்றிடங்களில் 25% மட்டுமே இந்த நிபந்தனையின் கீழ் நிரப்பப்படும்.

**3. ஏனைய தகைமைகள்**

(i) விண்ணப்பதாரி நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (DS 04) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வடமேல் மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொள்ளாதவராக இருந்தாலும், அவரின் வாழ்க்கைத் துணை அண்மிய 03 ஆண்டுகளில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால் அவர்களின் விண்ணப்பமும் கருத்தில் கொள்ளப்படும். வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS 04 கிராம அலுவலர் சான்றிதழ்) மற்றும் திருமண சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறைவாகவும் 35 வயதிற்கு அதிகமாகவும் இருத்தலாகாது. (மேலே உள்ள நிபந்தனை 2(iv) இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.)

(vi) சகல விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும் மற்றும் கடமையாற்றுவதற்கு தகுந்த உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள்**

4.1 இப்பதவி நிரந்தரமானது என்பதுடன் தங்களுக்கு உரித்துடையது. ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெற்றுக் கொள்பவர்கள் கட்டுப்பட வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். நியமனம் பெற்றுக் கொள்வோர் அவர்களின் தகுதிகாண் காலத்தினுள் தமது கடமைகளும் நடத்தையும் திருப்திகரமான முறையில் நடத்தப்பட்டிருந்தால் மற்றும் முதலாம் வினைத்திறன்காண் தடை பரீட்சையில் சித்தி அடைந்திருந்தால் மற்றும் சேவையில் உறுதிசெய்வதற்கான ஏனைய தகைமைகளை பூரணப்படுத்தியிருந்தால் தகுதிகாண் காலம் முடிவில் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

4.3 2020.10.16 ஆந் திகதி அ. நி. சு. 18/2020 இன் படி பணியிலமர்ந்து 03 வருடங்களுக்குள் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

4.4 அரச கரும மொழி அல்லாத பிற மொழி ஊடகத்தில் சேவையில் சேரும் உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தின் போது தேவையான அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

4.5 இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு/பதவி உயர்வு நடைமுறையில் உள்ள விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையில் உள்ள விதிகளுக்கும், நிதி ஒழுங்குகளுக்கும், வடமேல் மாகாண நடைமுறை விதிகளுக்கும், திணைக்கள ஆணைகள் மற்றும் அரசாங்கத்தினால்/மாகாண சபையினால் விதிக்கப்படும் ஏனைய விதிகளுக்கும் உள்ளடக்கப்படுவார்கள்.

**5. ஆட்சேர்ப்புச் செய்தல்**

5.1 ஆட்சேர்ப்புச் செய்யும் முறை
வடமேல் மாகாண மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5.2 இந்தப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

| வினாத்தாள் | நேரம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கு அவசியமான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பொது அறிவு | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| பொது உளச் சார்பு | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

5.3 பாடத் திட்டம்

(i) பொது அறிவு - 02 மணித்தியாலம் (100 புள்ளி).

இலங்கையில் பொருளாதார மற்றும் வர்த்தக அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொது அறிவை அளவிடும் வினாத்தாள்.

(ii) பொது உளச் சார்பு - 01 1/2 மணித்தியாலம் (100 புள்ளி).

5.4 பரீட்சை விதிமுறை

(i) இப்பரீட்சைக்கு சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் விண்ணப்பிக்கலாம்.

(ii) சகல விண்ணப்பதாரிகளும் இரண்டு (02) வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

(iii) சகல விண்ணப்பதாரிகளும் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டியது ஒரே மொழி மூலத்திலாகும். அந்த மொழி மூலம் அவர் நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழி மூலமாக இருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பதாரிக்கு தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(v) இந்தத் தேர்தலில் தேர்ச்சி பெற மேற்கண்ட ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 நேர்முகப் பரீட்சை

(i) பரீட்சையில் தேர்ச்சி பெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் தகுதியின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவு விண்ணப்பதாரிகள் தகைமையை பரீட்சித்தலுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரியின் கல்வி மற்றும் தொழில் தொடர்பான தகுதிகள் உட்பட அடிப்படை தகைமைகளும் உடல் தகைமைகளும் மட்டுமே பரிசோதிக்கப்படும்.

**6. பரீட்சை கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 1200.00 ஐ வடமேல் மாகாண மாகாண சபை இலக்கம் 2003.02.13 இன் வருமானத் தலைப்புக்கு வரவு வைக்கப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் கட்டணங்களைச் செலுத்தி தன்னுடைய பெயரில் பெற்றுக்கொள்ளும் வ. மே. மா. ச. நி. 2 பற்றுச் சீட்டினை பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். வ. மே. மா. ச. நி. 2 பற்றுச் சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுக்கள் அல்லது காசுக் கட்டளைகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவ்வாறான பற்றுச்சீட்டுக்களை முன்வைக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும், எந்தக் காரணத்திற்காகவும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும், அந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். (கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பின்னர் பயனளிக்கலாம்.)

**7. விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்கு :**

7.1 (அ) இந்த ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுதல் நிகழ்நிலையில் psc.nw.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். psc.nw.gov.lk என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை PDF வடிவிலான கோப்பாக பதிவிறக்கம் செய்து அதில் அச்சு பதித்த பிரதி ஒன்றினையும் முன்வைக்க வேண்டும்.

(ஆ) ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே முன்வைக்க முடியும்.

(இ) பதிவிறக்கம் செய்து அச்சுப் பதித்துக் கொண்ட பிரதியில், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினை அதற்குரிய இடத்தில் ஒட்டி, வடமேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் தபாலில் அனுப்ப வேண்டும். (பதிவிறக்கம் செய்து அச்சுப் பதித்ததன் நிழற் படப்பிரதி ஒன்றை தம் வசம் வைத்திருத்தல் பயனளிக்கலாம்.)

7.2 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.07.08

7.3 நிகழ்நிலையில் முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை 2024.07.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

செயலாளர்,
வடமேல் மாகாண மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழு,
வடமேல் மாகாண மாகாண சபை அலுவலகத் தொகுதி.
குருநாகல்.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் மாகாண இறைவரித் திணைக்களத்தின் வரி அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024" என்பதோடு வதியும் மாவட்டத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

8. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினை உரிய தகவல்களோடு பூரணப்படுத்திய நிகழ்நிலை விண்ணப்பத்தையும், அதன் அச்சு பிரதியையும் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

பரீட்சை நடைபெறும் திகதிக்கு 03 நாட்கள் முன்னர் வரை பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக வடமேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரீட்சைகள் பிரிவுக்கு 037 2233769 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் அறிவிக்க வேண்டும்.

9. விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :

விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றும் போது, அனைத்து பாடங்களுக்கும் தம் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் பரீட்சார்த்திக்கு உறுதி செய்ய வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு;

(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

குறிப்பு : - பரீட்சை மண்டபத்தில் விண்ணப்பதாரி ஒருவர் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

10. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சார்த்ததை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரி ஒருவர் பொய்யான தகவல்களை வழங்கி இருக்கிறார் என்றோ அல்லது உண்மையான தகவல்கள் வேண்டும் என்றே மறைத்திருக்கிறார் என்றோ தெரிய வந்தால் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

11. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் தொடர்பில் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் இல்லாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் வடமேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கருதப்படும்.

12. இந்தப் பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் அல்லது தெரிவு செய்யாமல் விடுதல் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

*13. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் மொழிப் பிரயோகங்கள் தொடர்பில் இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.*

வடமேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

*ஈ. எம். பி. ஏக்கநாயக,*
செயலாளர்,
வடமேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
*2024, மே 29.*

*06 - 85*